www.kalviexpress.in www.kalviexpress.in

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

NEET , JEE AND VIII, X, XI, XII BOARD EXAM பயிற்சி மையம்,
SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்.
அலைபேசி : 99655-31727, 94432-31727

பத்தாம் வகுப்பு - தமிழ்

அரையாண்டுப் பொதுத்தேர்வு டிசம்பர் - 2019

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

TENTATIVE ANSWER KEY **13.12.2019**

விடைக்குறிப்பு

பகுதி – 1(மதிப்பெண்கள் - 15)		15x1=15	
i)அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் **ii) கொடுக்கப்பட்ட நான்கு விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**			
1	ஆ) 1-(iii), 2-(i), 3-(iv), 4-(ii)	1	1
2	அ) அகவற்பா	1	1
3	அ) கருணையன் எலிசபெத்துக்காக	1	1
4	ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்	1	1
5	ஈ) ஜப்பான்	1	1
6	ஆ) கஅ, ச	1	1
7	அ) வேற்றுமை உருபு	1	1
8	அ) வணிகக் கப்பல்களும், ஐம்பெருங்காப்பியங்களும்	1	1
9	அ) முல்லை	1	1
10	ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்	1	1
11	அ) திருப்பதியும் திருத்தணியும்	1	1
12	அ) அருளை, பெருக்கி	1	1
13	இ) அருமை+துணையாய்	1	1
14	ஈ) நீதிவெண்பா	1	1
15	இ) கா.ப. செய்குதம்பிப்பாவலர்	1	1

www.kalviexpress.in

	பகுதி – II (மதிப்பெண் 18) **பிரிவு – 1** **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**	**4x2=8**	
16	**மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம்:** ❖ அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள். அழியாத வகையில் இருப்பதற்காகவே மெய்க்கீர்த்தி பாடப்பட்டது. ❖ இதற்கு முன்னோடி பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள். பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் தொடங்கியது இப்பழக்கம். சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி என்று பெயர் பெற்றது.	1 1	2
17	**பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார்:** ❖ கா.அப்பாதுரையார், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய் மொழி என்னும் சிற்றூரில், காசிநாதப்பிள்ளை-முத்து இலக்குமி அம்மாள் வாழ்வினையருக்கு 24.06.1907 என்று பிறந்தார். பெற்றோர் சூட்டிய பெயர் "நல்லசிவம்" என்பதாகும். ஆய்வறிஞர் அப்பாத்துரையார் எடுக்க எடுக்கக் குறையாத ஓர் அறிவுச் சுரங்கம்; பன்மொழிப் புலவர்; தென்மொழி தேர்ந்தவர்; ❖ உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே! என்று பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் கூறுகின்றார். (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)	1 1	2
18	**கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகு:** ❖ இந்த உலகம் அமைதியானது. இந்த உலகினைத் தாங்குபவை மென்மையான தண்டுகளாகிய உயிர்கள். அது மென்மையானது. மென்மையான அவ்வுயிர்களை மென்மையாகக் கையாள வேண்டும். ❖ அதனுடைய மென்மையைக் கையாள முரட்டுச்சுபாவம் கூடாது. இரண்டாலும் உயிர் அழியாது இருக்க வேண்டும். மென்மைக்கு ஆபத்து எனில் பிரபஞ்சத்துக்கு அழிவாய் அமையும்.	1 1	2
19	**விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள் :** விருந்தினராக வந்தவரை வியந்துரைத்தல் என்பது விருந்தினரின் செயல்களை வியந்து கூறி வரவேற்றல் நல்சொற்களைப் பேசுதல்; விருந்தினர் மகிழுமாறு இனிமையான சொற்களைப் பேசுவது - முகமலர்ச்சியுடன் பேசுதல்; அன்போடு வருக என வருவேற்றல், எழுந்து நிற்றல், அவருடன் தொடர்புடைய செய்திகளைக் கூறி மகிழச் செய்தல், அவர் அருகிலேயே அமருதல், அவரைப் பின் தொடர்ந்து சென்று வழியனுப்பிவைத்தல், அவருக்குப் பிடித்த பொருள் (உணவு, பழம், வெற்றிலை பாக்கு) முதலியவற்றை அளித்தல் ஆகியவை ஆகும்.	2	2

20	**விடைக்கேற்ற வினா:** அ) சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடிக்க உதவும் செயற்கை நுண்ணறிவு கணினி எது? ஆ) திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் எதற்கு பயன்படுகிறது? **(ஏற்ற விடை இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**	1 1	2
21	**திருக்குறள்** ***செயற்கை*** *அறிந்தக் கடைத்தும் உலகத்* *தியற்கை அறிந்து செயல்.* - திருவள்ளுவர்	2	2
	பிரிவு – 2 **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**	**5x2=10**	
22	**உடுப்பதூஉம், உண்பதூஉம்:** இன்னிசை அளபெடை வந்துள்ளது. **இன்னிசை அளபெடை:** செய்யுளில் ஓசை குறையாத இடத்தில் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.	1 1	2
23	**தொடர் அமைத்தல்** அ) விளித்தொடர் - **அம்மா சொல்!** ஆ) வினையெச்சத் தொடர் - **குழந்தை வந்து பேசியது** **(ஏற்ற விடை இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**	1 1	2
24	**காலவழுவமைதி:** ❖ "வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்வேன்" என அமைதல் வேண்டும். ❖ இத்தொடரில் வருகின்ற, செல்கிறேன் என்பன நிகழ்காலத்தைக் குறிக்கும் சொற்கள். ❖ "வரவிருக்கின்ற", 'செல்லவிருக்கிறேன்" என்று எதிர்காலத்தைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக 'வருகின்ற' 'செல்கின்ற' என்று குறிப்பிட்பட்டுள்ளதால் கால வழுவமைத்திக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.	1 1	2
25	**கலைச்சொல்லாக்கம்:** Modern Literature – நவீன இலக்கியம் Epic Literature – காப்பிய இலக்கியம் **குறிப்பு:** செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா, சொற்களை இணைத்துப் பொருத்தமான தொடரை உருவாக்குக. **மழை**க்காலத்தில் **பொன்**னென மலர்ந்த வேங்கை மலரில் இருந்த **தேனை** உண்பதற்கு சூழ்ந்த வண்டுகளின் சத்தத்தைக் கேட்டு சிறு **விலங்குகள்** பயந்து நடுங்கின.	1 1 2	2

26	**தனிசொற்றொடர்:** அ) அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தாள். ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. உடனே அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.	1 1	2
27	**பகுபத உறுப்பிலக்கணம்:** கிளர்ந்த - கிளர் +த்(ந்) + த் + அ கிளர் - பகுதி த் - சந்தி , த், ந் ஆனது விகாரம் த் - இறந்தகால இடைநிலை அ - பெயரெச்ச விகுதி	1 1	2
28	**தொகையை அடையாளம் கண்டு தொகை அமைத்தல்:** அ) கீரிபாம்பு- உம்மைத்தொகை செல்வனும் குமரனும் **கீரியும் பாம்பும்** போல் சண்டை போட்டுக் கொண்டே இருந்தனர். ஆ) இன்சொல் - பண்புத்தொகை இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.	1 1	2
	பகுதி – III (மதிப்பெண் 18) **பிரிவு – 1** **எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்**	**2x3=6**	
29	***மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழி வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு உதவுதல்*** ❖ *நல்ல மொழிபெயர்ப்பாளன் சில மொழி மீறல்களைச் செய்வான். இதன்மூலம் புதிய இலக்கண விதிகளின் தேவையை உருவாக்குவான்.* ❖ *செய்யுளையே தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ், அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பை எதிர்கொண்டபோது உரைநடைவளர்ச்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.* ❖ *அப்போது தமிழ், ஆங்கிலத் தொடரமைப்புகளையும் கூறுகளையும் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மொழிபெயர்ப்பு இத்தகைய மொழிப்பிரச்சினைகளைக் கடந்து, அதன் தீர்வாக மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.*	1 1 1	3
30	**சங்க இலக்கியங்களில் போற்றப்படும் அறங்கள்:** **அரசியல் அறம் :** 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அறநெறியே	3	3

	அரசின் முதல் வெற்றியாகும்.'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' என்பதும் மன்னனது செங்கோலும் வெண்கொற்றக்குடையும், அறத்தின் கூறுகளாகும். அரசன் நீர்வளம் பெருக்கி, உணவுப் பெருக்கம் காண்பதும், அனைவருக்கும் அவற்றைக் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமை எனக்கூறப்பட்டது. இவையாவும் இன்றைய அரசுக்கும் பொருந்தும். கல்வியும், நீர்வளமும், உணவும், இன்றைக்கும் சவாலாகவே உள்ளது. எனவே இந்நெறி இன்றைய அரசுக்கும் பொருந்தும். **வணிகம் :** வணிகம் அன்றைய காலத்தில் அறநெறியே கொண்டு, பொய் சொல்லாது, வாங்குவதிலும், விற்பதிலும் ஒரு நேர்மை இருந்தது. ஆனால் இன்றைய வணிகமோ பதுக்கல், அதிக விலைக்கு விற்றல், மிகக்குறைவாக வாங்குதல், கலப்படம் என பல செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பண்டைய நாள் வணிகம் போல் செயல்பாடுகள் இருக்குமானால் நம் வணிகம் உலகின் முதன்மையாக விளங்கும். **போர் :** பண்டைய போர் நெறிக்கும், இன்றையப் போர் முறைக்கும் பல வேறுபாடுகள் உண்டு. எல்லைகள் விரிந்து போரின் செயல்களும் விரிந்துள்ளன. போரின் போது உலக நாடுகளிடையேயுள்ள நெறிமுறைகள் எந்த நாடவருமட் முழுமையாகக் கடைபிடிப்பதில்லையோ, என எண்ணத் தோன்றுகிறது. இன்றைய போர் சாதி, மத, இனச் சண்டையாகவே உள்ளது. இதில் அறம் என்பது சிறிதும் இல்லை. எல்லோரும் பேசுவதை விட்டு அறநெறிகளைச் செயல்படுத்த வேண்டும். **வாய்மை :** வாய்மையை சிறந்த வீரமாகப் பண்டைய நாளில் கருதினர். ஆனால் வாய்மை என்று இன்று சொன்னால் சிரிப்பர். மெய்யாக, உண்மையாக வாழ்பவன் ஏமாளி, பிழைக்கத் தெரியாதவன் என்பதே உண்மையாக உள்ளது. மொத்தத்தில் வாய்மை நன்மை தரும் என்பதை உணர அறநெறிகள் வலியுறுத்துவதை மக்கள் கடைபிடிக்க வேண்டும். **(ஏதேனும் ஒன்று இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**		
31	**உரைபத்தி விடைகள்:** அ) நிகழ்கலைகள் ஆ) பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குக் கற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துறை செய்கின்றன. இ) மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.	1 1 1	3

	பிரிவு – 2 **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்**	**2x3=6**	
32	**காசிக்கண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்கள்:** ❖ விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், ❖ நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், ❖ முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல் ❖ 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்றல், ❖ அவர் எதிரில் நிற்றல், ❖ அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல், ❖ அவர் அருகிலேயே அமர்ந்துகொள்ளுதல், ❖ அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல், ❖ அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.	3	3
33	**நவீன கவிதை - நாட்டுப்புறப்பாடல் ஒப்பீடு:** **நவீன கவிதை** / **நாட்டுப்புறப் பாடல்** பூக்களைத் தொடுத்தல் என்பது நுட்பமாகச் செய்ய வேண்டிய செயல். அது ஒரு கலை பூக்களைத் தொடுக்கும்போது அவற்றின் காம்புகளை இறுக்கி முடிச்சிட்டால் பூக்கள் காம்புகளிலிருந்து துண்டிக்கப்பட்டு விடும். தளர முடிச்சிட்டால் பூக்கள் நழுவி கீழே விழுந்துவிடும். தன் வாழ்நாள் முழுவதும் அறிந்திருந்தும் வருந்தாமல் சிரிக்கின்ற இம்மலர்களை எவ்வாறு தொடுப்பது என நவீன கவிதை கூறுகிறது. மாரியம்மனுக்கு வேண்டிய மலர்களைக் கையால் எடுத்தால் காம்பழுகிப் போய்விடுமோ என எண்ணி விரலாலே எடுக்கலாம் என்றால் வெம்பி விடுமென்று தங்கத்தால் ஆனத் துரட்டியைப் பயன்படுத்திப் பூக்களை எடுப்பதாக நாட்டுப்புறப் பாடல் கூறுகிறது. இரு பாடல்களும் பூக்கள் மிகவும் மென்மை என்பதால் அதனை நுட்பமாகக் கையாள வேண்டும் என்று கூறுகிறது.	3	3
34	**<u>அன்னை மொழியே!</u>** **அழகார்ந்த செந்தமிழே!** ***அன்னை மொழியே!*** *அழகார்ந்த செந்தமிழே!* *முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!* *கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்* *மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!* *தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!* *இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!* *மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!* *முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!* *– பாவலரேறு பெருஞ்சித்திரனார்*	3	3

(அல்லது)

சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

– இளங்கோவடிகள்

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் **2x3=6**

35 **அலகிட்டு வாய்பாடு:**

சீர்	அசை	வாய்பாடு
அரி/யவற் /றுள்	நிரை நிரை நேர்	கருவிளங்காய்
எல் /லாம்	நேர் நேர்	தேமா
அரி/தே	நிரை நேர்	புளிமா
பெரி/யா/ரைப்	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
பே/ணித்	நேர் நேர்	தேமா
தம/ராக்	நிரை நேர்	புளிமா
கொளல்	நிரை	மலர்

2 — 3

இக்குறட்பா **மலர்** என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது. 1

36 **தற்குறிப்பேற்ற அணி:**

அணி இலக்கணம்: இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். 1

எ.கா: போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட 1

பாடலின் பொருள்:
கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பது போல கை காட்டியது என்பது பொருள்.

அணிப்பொருத்தம்:
கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். 1 — 3

www.kalviexpress.in

37	**புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி:** ❖ **வெட்சித்திணை** : அவந்திநாட்டு மன்னன், மருதநாட்டுடன் போர் தொடுக்கும் முன்னர் அந்நாட்டுப் பசுக்களுக்குத் துன்பம் நிகழக்கூடாது என எண்ணி, தன் வீரர்களை அனுப்பி மருதநாட்டுப் பசுக்களைக் கவர்ந்துவரச் செய்வான். அப்போது அவர்கள் வெட்சிப் பூவைச் சூடிச் செல்வார்கள். இது ஆநிரை கவர்தல் எனப்படும். ❖ **கரந்தைத்திணை** : மருதநாட்டு வீரர்கள் கரந்தைப் பூவைச்சூடி அவந்தி நாட்டு வீரர்கள் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்பர். இது ஆநிரை மீட்டல் எனப்படும். ❖ **வஞ்சித்திணை** : நாடு பிடிக்கும் ஆசையின் காரணமாக அவந்தி மன்னன் மருத மன்னர்பால் போருக்குச் செல்வார். அப்போது அவந்தி வீரர்கள் வஞ்சிப் பூவை அணிந்து செல்வர். ❖ **காஞ்சித்திணை** : தன் நாட்டினைக் கவர வந்த அவந்தி நாட்டு மன்னனுடன் எதிர்த்து நின்று மருதவீரர்கள் காஞ்சிப் பூவினை அணிந்து போரிடுவார்கள். ❖ **நொச்சித்திணை** : அவந்தி நாட்டினர் போரில் மருதநாட்டு மதில்களை முற்றுகையிடுவர் அப்போது மருதநாட்டு வீரர்கள் நொச்சிப் பூவைச் சூடி மதில்களைக் காப்பர். ❖ **உழிஞைத்திணை** : கோட்டையில் புகுந்து அவந்தி வீரர்கள் மதிலை வளைப்பர். அப்போது அவந்தி வீரர் உழிஞைப் பூவைச் சூடுவர். ❖ **தும்பைத்திணை** : இரு நாட்டு வீரரும் தும்பைப் பூவைச் சூடி போரிடுவர். ❖ **வாகைத்திணை** : போரில் வென்ற மன்னன் வாகைப் பூவைச் சூடி மகிழ்வான். வெற்றியைக் கொண்டாடுவான்.	3	3
	பகுதி – IV (மதிப்பெண்கள்-25) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**	**5x5=25**	
38 அ)	**சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் :** ❖ சிலப்பதிகாரத்தில் வணிகம் செய்ய வீதிகளே இடமாக அமைந்திருந்தது. வணிகர்கள் பொருள்களைக் கூவிவிற்றதையும் காணமுடிகிறது. ❖ மக்கள் தெருக்களில் அமர்ந்து, எவ்வகையான விளம்பரங்களும் இன்றி வணிகம் செய்தனர் மருவூர்பாக்க வணிகவீதிகளில் பலவகையான பொருள்களை வணிகம் செய்யும் தொல்வாணிகக் குடியினரைக் காணமுடிகிறது. ❖ தங்கம், இரத்தினம், வெள்ளி, செம்பு, இரும்பு என எல்லாப் பொருள்களும் கிடைத்ததையும் அரிசி, எண்வகையான தானியங்கள், உப்பு, இறைச்சி என்பதுடன் பிட்டு, அப்பம் விற்போரையும் காணமுடிந்தது. ❖ மருவூர்ப்பாக்க வணிக வீதியில் யாழ், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளை இசைத்து எழுவகையான சுரங்களுடன் பாடும் பெரும்பாணர்கள் வந்தனர்.	2	5

	❖ வணிகர்கள் அக்காலத்தில் ஒருபொருளைக் கொடுத்து மறுபொருளைப் பெற்றனர். இங்கு பண்டமாற்று வணிகம் நடைபெற்றது. **இக்கால வணிக வளாகங்களும், அங்காடிகளும் :** ❖ இக்காலத்தில் வணிகம் நடைபெற மிகப்பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டு பல்வேறு வணிகங்கள் நடைபெறும் வணிக வளாகங்கள் உள்ளன. பொருள்களை விற்பனை செய்ய பலவகையான விளம்பரங்கள், விளம்பரச் சுவரொட்டி பத்திரிக்கைகளில் விளம்பரங்கள், தொலைக்காட்சி விளம்பரம், வலைதளங்களில் விளம்பரம் எனப் பொருள்கள் விளம்பரப் படுத்தப்படுகின்றன. ❖ உலக வியாபாரமாக்கப்பட்டதில் வணிகங்கள் செய்வோர்கள் பலரையும் காண முடிகிறது. பல கல்வி பயின்றோர்கள் வணிகம் செய்வதையும் காணலாம். தங்கம், வெள்ளி விற்பனைக்கும் ஆபரணக்கடைகள் எனப் பலவும் காணப்படுகின்றன. ❖ பலவகையான அணிநகைகள் விதவிதமாக அடுக்கி வைத்து, வாங்குவோர் மனதைக் கவருவதாக அழகுபடுத்தப்பட்டுள்ளது. வீட்டு உபயோகப் பொருள்களும், உணவுப் பொருள்களும் சிறிய அளவு முதல் பெரிய அளவு வரையில் அடைக்கப்பட்டுக் கிடைக்கின்றன. ❖ காய்கறிகள், பழவகைகள் என எல்லா வகையானவையும், எல்லாக் காலங்களிலும் கிடைக்கின்றன. வணிக வளாகங்களில் இசை நிகழ்ச்சிகள், பாட்டு, நடனம் எனப் பலவும் நடைபெறுகிறது. குழந்தைகள் பொழுது போக்கிற்கெனவும், விளையாடவும் பல்வேறு சாதனங்கள் இலவசமாகவும், கட்டணம் செலுத்தி விளையாடவும் அமைக்கப்பட்டுள்ளன. 'மால்' என அழைக்கப்படும் இவ்வணிக வளாகத்தில் கிடைக்காத பொருள்களே இல்லை. ❖ உலகம் முழுவதிலும் உற்பத்தியாகும் எல்லாப் பொருளையும் இங்கு வாங்கலாம். பணம், கடன் அட்டைகள் கொண்டும் பொருள்களை வாங்கலாம். தவணை முறையில் நிபந்தனைகளுடன் பொருள்களை வாங்க முடிகிறது.	3	
ஆ	**சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழல்:** **முன்னுரை:** தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கொண்டிருந்தனர். மழைக்காலத்தில் அவர்கள் வாழ்வை எதிர்கொள்கிற இயல்பு இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. **மழை மேகம்:** அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த வலிமையான கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலிச் சக்கரவர்த்தி தன் கையிலே நீர் ஊற்றிய பொழுது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம்.	1	5

	மழைப்பொழிவு: அம்மேகமானது ஒலி முழங்குகின்ற குளிர்ச்சியான கடல் நீரைப் பருகி, வலப்பக்கமாக எழுந்து மலைகளை இடமாகக் கொண்டு விரைந்து சென்று பெரிய மழையைப் பொழிகிறது. அம்மாலைப் பொழுதானது பிரிவுத் துன்பத்தைத் தருவதாக இருக்கின்றது. **தெய்வ வழிபாடு:** முதிய பெண்கள் மிகுந்த காவலுடைய ஊர்ப்பக்கம் சென்று யாழிசையைப் போன்று வண்டுகள் ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள், அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர். பிறகு தெய்வத்தைத்தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர். **கன்றின் வருத்தம்:** அங்குச் சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள், குளிர்தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள் “புல்லை மேய்ந்து தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே” என்றாள். **முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது:** இது நல்ல சொல் எனக் கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர். நின் தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவது உறுதி. தலைவியே மனத்தடுமாற்றம் கொள்ளாதே என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர் இவையே முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளாகும். **முடிவுரை:** முல்லை நிலத்தின் மழைப்பொழிவையும், முல்லை மலரும் நெல்லும் தூவி முதுபெண்டிர் தெய்வத்தை வழிபட்டதையும், விரிச்சி கேட்டதையும் முல்லைப்பாட்டில் நப்பூதனார் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.	1 1 1 1	
39 அ)	அனுப்புநர் பெறுநர் விளித்தல் பொருள் செய்தி இப்படிக்கு இடம், நாள் உறைமேல் முகவரி	1 1 2 1	5

ஆ	விளித்தல் பொருள் செய்தி இப்படிக்கு இடம், நாள் உறைமேல் முகவரி	1 1 2 1	5
40	**கவிதை – அறிவைத் திற!** நண்பா!... உன் கையில் புத்தகப் பையை எடு அமர் ஆழ்ந்துயோசி கல்வியைப் பற்றி, உனக்குப் புரிந்திருக்கும் அனைவருக்கும் புரியவை கல்வியைப் பற்றி, காலத்தை வெல்லலாம் கல்வி பயிலு உலகத்தையும் வெல்லலாம் கல்வி பயிலு படி படித்துக் கொண்டேயிரு புத்தகம் உன்னை புனிதராக்கும். **(கவிதை பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**	5	5
41	**படிவம்** **நூலக உறுப்பினர் படிவம்** **கன்னியாகுமரி மாவட்ட நூலக ஆணைக்குழு** **மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் - மாவட்ட மைய நூலகம்** **உறுப்பினர் சேர்க்கை அட்டை** **அட்டை எண் : 1603 உறுப்பினர் எண் : 41512** ♣ பெயர் : **xxxxxx** ♣ தந்தை பெயர் : **கு. தமிழரசன்** ♣ பிறந்த தேதி : **14.04.2005** ♣ வயது : **15** ♣ படிப்பு : **பத்தாம் வகுப்பு** ♣ தொலைபேசி எண் : **xxxxxxxxxx** ♣ முகவரி : **18 பூங்கா சாலை, திருவள்ளுவர் நகர்** (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) **xxxxxxxxx**	5	5

www.kalviexpress.in

நான் **மாவட்ட மைய** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை **ரூ.100** சந்தா தொகை **ரூ.10** ஆக மொத்தம் **ரூ.110** ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : xxxxxxx தங்கள் உண்மையுள்ள,

நாள் : 06.06.2019. xxxxx

திரு/திருமதி/செல்வி/செல்வன் **xxxxx** அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில/மைய அரசு அதிகாரிகள் கல்லூரி முதல்வர்கள் பேராசிரியர்கள் உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சட்டமன்ற / நாடாளுமன்றஉறுப்பினர்கள் நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய பேரூராட்சி உறுப்பினர்கள்)

42 **அ)வீட்டிலும், பள்ளியிலும் நடந்து கொள்ளும் விதங்கள்:**

பள்ளியில் நான்	வீட்டில் நான்	
நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன்.	வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன்.	1
உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன்.	உடன் பிறந்தவர்களுடன் பாசமாக இருப்பேன்.	1
ஆசிரியரை மதித்து நடப்பேன்.	பெற்றோர்களை மதித்து நடப்பேன்.	1
பாடங்களைக் கூர்ந்து கவனிப்பேன்.	வீட்டுப் பாடங்களைத் தினமும் வீட்டில் எழுதுவேன்.	1
சிறந்த மாணவன் எனப் பெயர் எடுப்பேன்.	நல்லப்பிள்ளை எனப் பெயர் எடுப்பேன்.	1

(அல்லது)

ஆ) மொழிபெயர்ப்பு

மலர் : தேவி, அறையை விட்டு வெளியேறுமுன் விளக்குகளை அணைத்துவிட்டுச் செல்.

தேவி : ஆம். நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும். 5

மலர் : இரவு நேரத்தில், தெருக்களை வெளிச்சமாக வைத்திருக்க நம் அரசாங்கம் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது. 5

தேவி : யாருக்கு தெரியும்? ஒரு வேளை நம் நாடு எதிர்காலத்தில் செயற்கை சந்திரன்களை உருவாக்கி இரவை பகல் ஆக்கலாம்!

மலர் : சில நாடுகளில்கூட இதுபோன்ற ஒளிரும் செயற்கை கோள்களை எதிர்காலத்தில் இயக்கப் போகின்றன எனப் படித்தேன்.

தேவி : அருமையான செய்தி! இதுபோல் செயற்கை சந்திரன்களைக் கொண்டு பேரிடர் தருணங்களில் மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு ஒளியூட்டலாம்.

	குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா உரைபத்தி விடைகள்: i) ஈழத்துப் பூதன் தேவனார் ii) உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் iii) தியாகம் iv) பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. v) பிறருக்கு உதவும் பண்பு	1 1 1 1 1	5
	பகுதி – V (மதிப்பெண்கள் - 24) **அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்**	**3x8=24**	
43 அ)	**செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்:** **முன்னுரை :** இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு. இந்த செயற்கை நுண்ணறிவு எதிர்காலத்தில் எவ்வாறு பயன்படப் போகிறது என்பதை இக்கட்டுரையில் பார்க்கலாம். **செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடு:** வேலைவாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு வரும். 'ரோபோவிடம்' குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களை நாம் பார்ப்போம். வயதானவர்களுக்கு உதவிகள் செய்தும் அவர்களுக்கு உற்ற தோழனாய்ப் பேச்சுக் கொடுத்து பாதுகாக்கும் ரோபோக்கள். செயற்கை நுண்ணறிவுள்ள ரோபோக்களால் மனிதர் செய்ய இயலாத அலுப்புத் தட்டக்கூடிய கடினமான செயல்களைச் செய்யமுடியும். மனித முயற்சியில் உயிராபத்தை விளைவிக்க கூடிய செயல்களைச் செய்ய முடியும். **வணிகத்தில் செயற்கை நுண்ணறிவு:** புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன. விடுதிகளில், வங்கிகளில் அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும். அதுமட்டுமின்றி நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, உடன் வந்திருக்கும் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றைச் செய்யும். **போக்குவரத்தில் செயற்கை நுண்ணறிவு:** எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்க வேண்டியிருக்கும். இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்துகள் குறையும். போக்குவரத்து நெரிசல் இருக்காது அதன்மூலம் பயண நேரம் குறையும் எரிபொருளும் மிச்சப்படும். இத்தகைய மென்பொருள்கள் கவிதைகள், கதைகள் விதவிதமான எழுத்து நடைகள் போன்றவற்றைக்	2 2 2	8

www.kalviexpress.in

	கற்றுக்கொண்டு மனிதர்களுடன் போட்டியிட்டாலும் வியப்பதற்கில்லை. **கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவு:** கல்வித்துறையில் இத்தொழில்நுட்பத்தைப் பலவிதங்களில் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை தீமை என்று இரண்டு பக்கங்கள் இருக்கும் அதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக்கொண்டு நன்மைக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும். **முடிவுரை:** இப்போது உலகில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பயன்பாட்டில் இருக்கின்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் எதிர்காலத்தில் உலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.	2	
ஆ	**எதற்காக எழுதுகிறேன்? – ஆசிரியர் ஜெயகாந்தன்** **அசோகமித்திரன் கருத்து:** ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம். **கா.செல்லப்பன் கருத்து:** நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் - இவைகள் தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ் இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர்.	4 4	8
44 அ)	தலைப்பு, ஆசிரியர் முன்னுரை உட்தலைப்புகள் (கருத்தோட்டம்) முடிவுரை (கதை கருத்தோட்டத்துடன் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)	1 1 5 1	8
ஆ	தலைப்பு முன்னுரை உட்தலைப்புகள் (கருத்தோட்டம்) முடிவுரை (கருத்தோட்டத்துடன் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)	1 1 5 1	8

www.kalviexpress.in

45 அ)	தலைப்பு குறிப்புச் சட்டகம் முன்னுரை பொருளுரை மேற்கோள் உட்தலைப்புகள் முடிவுரை	1 1 1 4 1	8
ஆ	தலைப்பு குறிப்புச் சட்டகம் முன்னுரை பொருளுரை மேற்கோள் உட்தலைப்புகள் முடிவுரை	1 1 1 4 1	8

மதிப்பெண் பகுப்பாய்வு
(Mark Analysis with choice)

மதிப்பெண்கள்	மொத்த வினாக்கள்	புத்தக வினாக்கள்	அகவய வினாக்கள்	மொத்த மதிப்பெண்கள்
1	15	6	9	15
2	13	11	2	26
3	9	6	3	27
5	8	8	–	40
8	6	3	3	48
மொத்த மதிப்பெண்கள்		110	46	156
சதவீதம்		71%	29%	100%

www.kalviexpress.in

*****

SHRI KRISHNA ACADEMY

✍ QUESTION BANK AND MINIMUM MATERIALS for ALL SUBJECTS AVILABLE FOR X, XI,XII

✍ CREATIVE QUESTIONS, STUDY MATERIALS (TOPPER GUIDE), FULL TEST QUESTION PAPERS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILBALE in ALL SUBJECTS.

✍ For MORE DETAILS: 99655-31727, 94432-31727